மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

# சூழ்நிலையின் துரித மதிப்பிடல்

(**Rapid Context Assessment** )

மார்ச் 2009

CONSORTIUM OF CHA HUMANITARIAN AGENCIES (GTE) LIMITED

### தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு


| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | 2 |
| ஆட்சிமுறைமை | 2 |
| பாதுகாப்பு | 2 |
| மனித உரிமைகள் | 3 |
| பொருளாதார சூழ்நிலை | 4 |
| சுற்றுச்சூழல் | 5 |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம் | 5 |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | 6 |
| வெளிச் செயற்பாட்டாளர்கள் | 7 |


### மாவட்ட


| | |
|---|---|
| அம்பாறை | 7 |
| மட்டக்களப்பு | 7 |
| கொழும்பு | 8 |
| யாழ்ப்பாணம் | 8 |
| மன்னார் | 8 |
| திருகோணமலை | 9 |
| வவுனியா | 9 |


### தற்காலப் போக்குகளின் பகுப்பாய்வுச் சட்டகம்

| | |
|---|---|
| அரசியல் சூழ்நிலை | → |
| ஆட்சிமுறைமை | ↘ |
| பாதுகாப்பு | → |
| மனித உரிமைகள் | → |
| பொருளாதார சூழ்நிலை | ↘ |
| சுற்றுச்சூழல் | ↘ |
| சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான | → |
| மனிதநேய மற்றும் அபிவிருத்திக்கான இடம் | ↘ |
| வெளிச் செயற்பாட்டாளர்கள் | |

### சுட்டிகளின் அடையாளம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாற்றம் இல்லை | → | சிறிது மேம்பட்டுள்ளது | ↗ | சிறிது சீர்கெட்டுள்ளது | ↘ |
| கணிசமானளவு மேம்பட்டுள்ளது | ↑ | கணிசமானளவு சீர்கெட்டுள்ளது | ↓ | | |

# முக்கிய சாராம்சம்



அரசியலில் ஐ.தே.க யானது தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவை அதனது தலைவராகக் கொண்டு மேலும் பிளவடைந்தது. ம.வி.மு ஆனது குழப்பத்திலுள்ளது. பத்து கட்சிகளின் கூட்டமைப்பாகிய ஆட்சியிலுள்ள ஐ.ம.சு.மு ஆனது அரசியல் ரீதியாக யுத்தத்திலேயே காலத்தை ஓட்டிக்கொண்டிருப்பதுடன், சித்திரை 25 ஆம் திகதி நடைபெறவுள்ள மேல் மாகாணசபைத் தேர்தலில் வெற்றியடையும் நிலையிலுள்ளது. பங்குனி ஆரம்பத்தில் இராணுவமானது கேந்திர முக்கியத்துவம் மிக்க புதுக்குடியிருப்பைக் கைப்பற்றியது. தற்போது எல்.ரீ.ரீ.ஈ ஆனது ஒரு சிறிய 27 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை, அல்லது ஒரு சில வருடங்களிற்கு முன்னர் அவர்கள் கொண்டிருந்த 15,600 சதுர கிலோமீற்றிரின் (இலங்கையின் நிலப் பரப்பின் 24%) பத்தில் இரண்டு பங்கினையே தக்கவைத்திருக்கின்றது. இம்மாதத்தில் அக்குரசவில் 11 பேர் கொல்லப்பட்டு பலர் காயமடையக் காரணமாகிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலானது பயங்கரவாதிகள் தொடர்ந்தும் தெற்கை தாக்கக் கூடும் என்பதைக் காட்டி நிற்கின்றது. பெருமளவில் வடக்கு, கிழக்கிலும், குறைந்தளவில் கொழும்பிலும் நடைபெறும் கடத்தல்கள், கைதுகள், மற்றும் காணாமல் போதல்களும், மட்டக்களப்பில் தொடரும் கொலைகளும் இம்மாதத்தில் ஒரு அதிகரிப்பினைக் காட்டுகின்றன. சுடரொளி ஆசிரியர் என். வித்தியாதரனின் கைதையும், ஒரு சில மணித்தியாலங்களில் விடுவிக்கப்பட்ட அரச தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னைய தலைவரின் கடத்தலையும் தொடர்ந்து தனியார் ஊடகத்தைச் செயலிழக்கச் செய்வதற்கான முயற்சியானது தொடர்கிறது. யுத்தத்தின் முடிவானது நாட்டில் நாம் விரும்புகின்ற யுத்தத்திற்குப் பின்னரான-சமூகத்தின் நிலமையினைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது. அரசினது யுத்த விளைவானது, மக்களது பாரிய ஆதரவுடன் கூடிய ஒரு சார்பான உந்துதலை ஏற்படுத்தியுள்ளதுடன், அரசாங்கம், மக்கள், மற்றும் ஆயுதமேந்திய படைகளை ஒன்றாக்கியுள்ளது என்பது புலனாகிறது. இன்னொரு கணிப்பானது சாதகத்தன்மை குறைந்தது, யுத்த வெற்றியானது ஜனநாயகத்தைக் குன்றச் செய்து, ஆயுதமேந்திய படைகளை அரசியலில் தலையிடச் செய்து மேலும் இனப் பிளவை தூண்டும்.

சர்வதேச சமூகமானது IDP கள் தொடர்பாகவும் வடக்கிலுள்ள மனிதவுரிமைப் பிரச்சினை தொடர்பாகவும் கவனம் செலுத்தியுள்ளது – கணிப்பீடுகள் 50,000 இலிருந்து 200,000 வரை வேறுபடுகின்றன. ஐ.நா பிரதிநிதியாகிய ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை IDP களிற்காக வழங்கியுள்ளதுடன், இரு தரப்பும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும் எனவும் கோரியுள்ளது. IDP களை யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவதன் பொருட்டு ஆகக் குறைந்தது போரினை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் அழைப்பானது இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஐ.நா முகவர்கள், ICRC மற்றும் சில NGO கள் ஆகியன வடக்கிலும் இந்தியாவிலும் உள்ள IDP களிற்காக ஒரு வெளிக்கள வைத்தியசாலையை ஒழுங்கு செய்ததன் மூலமாக IDP முகாங்களிற்கு ஒரு பாரிய உதவியை வழங்கியுள்ளன. ம.வி.மு ஆனது யுத்தத்தினை ஆதரிக்கின்றது. பிரதான எதிர்க் கட்சியாகிய ஐ.தே.க ஆனது விசேடமாக IDP கள் தொடர்பான ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டிய கடப்பாடுடையது, ஆனாலும் அது பெரும்பாலும் மௌனமாகவே உள்ளது. பங்குனியில் மேலும் உச்சமடைந்துள்ள பொருளாதார வீக்கமானது 2008 இன் முன்றாம் காலாண்டில் தொடங்கிய போக்கின் தொடர்ச்சியாகவுள்ளது. யுத்தமானது விரைவில் முடிவிற்கு வருமென்பதால் வியாபார நம்பிக்கைகள் ஒரு சிறிதளவேனும் முன்னேற்றமடைந்துள்ளன. நிதி நிலைமையானது இறுக்கமாகவுள்ளது. அரசாங்கமானது சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் விரிவாக்கத்திற்காக 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கத் தவறிவிட்டது, அத்துடன் ஓய்வூதிய ஒழுங்கீனங்களைச் சீர்செய்வதற்காக ரூ. 15 பில்லியன் தேவையாகவுள்ளது. அரசாங்கமானது திறைசேரி உண்டியலின் உயர் எல்லையை தற்போதுள்ள ரூ. 600 பில்லியனிலிருந்து ரூ. 750 பில்லியனிற்கு அதிகரிக்குமாறு சட்டசபையைக் கேட்கவுள்ளமையானது வரவு-செலவு பற்றாக்குறையை சமாளிப்பதற்காக பணத்தை அச்சிட அது தயாராகவுள்ளமையை குறித்து நிற்கின்றது. சுற்றுலாத்துறையும் ஆடை ஏற்றுமதிகளும் வீழ்ச்சியினால் பாதிப்படைந்துள்ளன. விலைகள் உயர்வடைகின்றன, ஆனால் உற்பத்தியானது குறைவாகவுள்ளமை தொடர்ச்சியான இழப்பிற்கு இட்டுச் செல்கின்றது. இலங்கையானது ஆடைத்தொழில், தேயிலை இரண்டிலுமே அதனது போட்டிக்குரிய நிலையினை இழக்கின்றது. அரசாங்கமானது ஏற்றுமதியாளர்களிற்கு சலுகைகளை வழங்குகின்றது, ஆனால் கொள்கையானது முழுமையானதாகவும் உறுதியானதாகவும் இல்லை. அரசாங்கமானது சிக்கல்களைத் தீர்ப்பதற்காக 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை IMF இடமிருந்து கேட்டுள்ளது. சுற்றாடலில் நீண்ட வறட்சியானது பயிர்களின் விளைச்சல்களையும் நீர்மின் தேக்கங்களின் நீர் மட்டத்தையும் குறைத்துள்ளது. இம்மாதத்தின் நடுப்பகுதியில் பெய்த மழையானது இந்நிலைமையைப் போக்க உதவியது.

# தேசிய மட்டத்திலான பகுப்பாய்வு - 27/2/2009—26/3/2009

## அரசியல் சூழ்நிலை

பழையானதுமான அரசியல் கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க) மிகவும் பிந்திய வீழ்ச்சி – முன்னர் எப்போதும் நிகழவில்லை. விவேகம் நிலைத்திருந்ததுடன், இது மிகவும் முக்கியமானதொரு காரணியுமாகும், ஐ.தே.க ஆனது ஏதாவது பிளவிற்கு உட்பட்டிருந்தால், இன்னொரு வகையில் சிக்கலான அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்கும்.

இவை யாவும் தற்போது வாக்காளர்களிலேயே தங்கியுள்ளன, ஆனால் தெரிவுகள் உறுதியானவை. பெரும்பான்மையாகவுள்ள ஏழை மக்கள் யார் உள்ளே வந்தாலும் வருந்தப் போவதில்லை. அவர்கள் (அரசியல் கட்சிகள்) யாவும் ஒரே மாதிரியானவை, பரிகாசத்திற்குரியவை. நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த ஏற்கனவே அவைகளில் உள்ளவர்களே வருந்துகின்றனர். எனவே அவர்களே மாற்றத்தை உண்டுபண்ணக் கூடியவர்கள். யுத்தம் தொடரப் போகின்றதா அல்லது வாழ்க்கைச் செலவைக் குறைப்பதா, இலங்கையானது அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதியில் பெருமளவில் தங்கியிருப்பதனால் எந்தவொரு அரசாங்கத்திற்கும் இதனை மேற்கொள்வது கடினம்.

பொருளாதார ரீதியாக இலங்கையானது ஒரு கவலைக்கிடமான நிலைமையில் உள்ளது. ரூபாயின் பெறுமதியானது மீண்டும் ரூ. 132 இனை அடையுமா? இலங்கை மத்திய வங்கியின கூற்றிற்கு அமைவாக இன்னொரு 1.3 மாதங்களிற்கு போதுமான நிதியுதவிகளைக் கொண்டுள்ள வெளிநாட்டு மாற்று நிதியத்தின் நிலை என்ன? மூன்றாவது சக்தியாக உருவெடுத்து வந்த ம.வி.மு ஆனது மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது இனவாதம் தவிர அவர்களது கட்சியானது கருத்துக்களில் முரண்பட்டுள்ளதுடன் குறிக்கோளையும் இழந்துள்ளது.

இவை யாவற்றுடனும் “சந்தானய” வை அடைவதற்கு 10 இலும் கூடிய அரசியல் கட்சிகள் மற்றும் மேலதிகமாகவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கூடியதும், வெற்றிலைச் சின்னத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதுமான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது (ஐ.ம.சு.மு) முன்னிலையிலுள்ளது. “சந்தானய” உடன் இணைந்துள்ள அரசியல் கட்சிகளில் சில SLFP, PA, MEP, NSSP, SLMC இலிருந்து பிரிந்த – அதாவுதுல்லா கட்சி, CPSL, NFF, CWC, UPPF, கலாநிதி சரத் அமுனுகமவினாலும், 360 பாகையில் திரும்பிய கரு ஜயசூரியவினாலும் தலைமை தாங்கப்படும் ஐ.தே.க இனது மாற்றுக் கட்சிகள்.

நிச்சயமற்ற தன்மைகளுடன் சகலரது பார்வைகளும் சித்திரை 25 ஆம் திகதி நடைபெறவுள்ள மேல் மாகாண சபைத் தேர்தலை நோக்கியவண்ணம் உள்ளன. மேல் மாகாணமானது சகல ஒன்பது மாகாணங்களிலும் கூடிய சனத்தொகையை கொண்டிருப்பதுடன், கொழும்பு, கம்பஹா, மற்றும் கழுத்துறை ஆகிய மூன்று பிரதான மாவட்டங்களையும் கொண்டுள்ளது. இத்தேர்தலானது யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வருவதா அல்லது பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதா என்பதனைத் தீர்மானிக்கும் மிகவும் முக்கியமான காரணியாக இருக்கப் போகின்றது.

## ஆட்சிமுறைமை

சில வாரங்களிற்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைப் பற்றி ஏற்பட்டிருந்த சர்வதேச கவனமானது தற்பொழுது அனேகமாக முழுமையாக மனிதவுரிமை நிலைகளை நோக்கித் திரும்பியுள்ளது. அகப்பட்டுள்ள மக்களின் நிலைமை பற்றி தற்போது வெளிநாடுகளிலிருந்து எழுகின்ற கண்டனங்கள் மக்களை வெளியேற்றுதற்கான ஒரு போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட வேண்டும் என்பதாகும். மேலதிகமாக அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயங்களில் மக்களைப் பாதிக்கத்தக்க பாரிய ஆயுதங்களைப் பிரயோகிக்கக் கூடாது என்பது சம்பந்தமான கோரிக்கைகளும் வந்த வண்ணம் உள்ளன. எல்.ரீ.ரீ.ஈ ஆனது இப்பாதுகாப்பு வலயங்களிற்கு உள்ளிருந்து அல்லது அருகிலிருந்து அரச படைகளைத் தாக்குவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது, மேலும் இலங்கை இராணுவமானது பாதுகாப்பு வலயங்களினுள் தாக்குவதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. ஐ.நா. வின் மனிதவுரிமை ஆணையாளர் உள்ளடங்கலாக பல சர்வதேசத்தவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இக்கண்டனங்கள் போர்க் குற்றங்களை ஏற்படுத்தக் கூடிய சர்வதேச சட்டவிதிகளை மீறியமைக்கான குற்றச் சாட்டுகளை உள்ளடக்கியுள்ளன. எதிர் காலத்தில் நாட்டை ஆளுவதற்கு அழைக்கப்பட்டால் சுயமாகவே நிலைமையை முன் வைப்பதற்கு ஒரு திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டிய பிரதான எதிர்க் கட்சியின் இது தொடர்பான மௌனமானது தற்போதய நிலைவரத்தைக் குழப்புவதாகவுள்ளது. எதிர்க் கட்சியாகிய ம.வி.மு ஆனது யுத்தத்திற்கு ஆதரவளிக்கும் அதே வேளையில், பிரதான எதிர்க் கட்சியாகிய ஐ.தே.க ஆனது தீர்மானமற்ற தன்மையைக் கொண்டிருப்பதுடன், யாது செய்யப்பட வேண்டும் என்பது பற்றி அதனது சொந்தத் தீர்மானங்களை மேற்கொள்ளாமல் உள்ளது. அரசாங்கமானது தானாகவே கண்டறியும் தீர்மானங்களைக் கண்டறிவதற்கு அரசாங்கத்தை அவர்கள் அனுமதிப்பது போல் புலனாகின்றது. அணுகுமுறையானது காத்திருந்து-பார்ப்போம் என்பது போல் உள்ளது. அத்துடன் ஐ.தே.க ஆனது, அதனது தலைமைத்துவம் சம்பந்தமாகவும் ஒரு நாட்டுப்பற்றுடைய கடமையாக அரசினது யுத்த முயற்சிக்கு ஆதரவு வழங்க விரும்பும் ஒரு பகுதியினைக் கொண்டு யுத்தம் தொடர்பாகவும் பிளவடைந்துள்ளது என்பது பற்றிய அறிக்கைகளும் உள்ளன. இம்மாத இறுதியளவில் தலை-மைத்துவத்திற்கான சண்டையானது முடிவடைந்துவிட்டமை புலனாகின்றது, இது பிரதான எதிர்க்கட்சியானது யுத்தம் பற்றிய அதன் நிலைப்பாட்டை மீளச் சிந்திக்க வழியமைத்துள்ளது.

மனிதவுரிமைக்கு எதிரான குற்றமாக சர்வதேச ரீதியில் விவரிக்கப்படும் ஒரு மனிதவுரிமை மீறல் நடவடிக்கையில் அரசினைச் சிக்கவைப்பதில் மட்டுமே பங்களிப்புச் செய்தலானது எதிர்க் கட்சியின் தலைமைத்துவத்தினைத் தக்கவைத்திருப்பதில் பங்களிப்புச் செய்யமாட்டாது. மாறாக, எதிர்த் தரப்பானது அரசிற்கு யுத்தத்தில் இழக்கப்படும் இலங்கையின் உயிர்களைக் காப்பதற்கும் அதன் மீதான சர்வதேச அழுத்தங்களை இலகுவாக்குவதற்கும் அவசியமான ஆலோசனையையும் ஆதரவையும் வழங்க வேண்டும். அத்துடன் எதிர்த் தரப்பானது நலன்புரி முகாம்களில் உள்ளவர்களையும், யுத்தத்தின் சான்றுகளாக வைத்தியசாலைகளில் நிரம்பிவழியும் மக்களையும் அணுக வேண்டும். தமிழ் மக்கள் யுத்ததிற்கு எதிராகவோ அல்லது யுத்தத்தின் வடுக்களைப் பற்றியோ கருத்துத் தெரிவிக்கின்ற போது, எல்.ரீ.ரீ.ஈ இன் ஆதரவாளர்கள் எனக் குற்றம் சுமத்தப்படும் ஆபத்திலுள்ள போது, பிரதான எதிர்க் கட்சியானது அவர்களைப் பாதுகாக்கவும் அவ்வாறு பேச இடமளிக்கவும் வேண்டியது அவசியமாகும். எதிர்த் தரப்பைத் தலைமை தாங்குபவர்கள் பொது மக்களின் உயிர்களைக் காப்பதற்காக நேர்மையான பொது, தேசியத் தலைமையை வழங்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

## பாதுகாப்பு நிலை

இவ்வழகிய தீவிலிருந்து பயங்கரவாதத்தை நீக்குவதற்கான மூன்று-ஆண்டுகள்-தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையானது புதுக்குடியிருப்பிற்கு வடக்காக அமைந்துள்ள இரணைப்பாலைச் சந்தியின் கைப்பற்றுகையைத் தொடர்ந்து அதனது கடைசி அவத்தையை அணுகியுள்ளது. அது பயங்கரவாதிகளை யுத்த சூனிய வலயம் உள்ளடங்கலாக 26.5 சதுர கிலோமீற்றரினுள் மட்டுப்படுத்தியுள்ளது. டி.பி.எஸ் ஜெயராஜின் பத்திரிகைக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல், எல்.ரீ.ரீ.ஈ ஆனது முன்னர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏறத்தாழ 15,600 சதுர கிலோமீற்றர் ஆட்சிப்பரப்பினைக் கொண்டிருந்தது.

பெரிய வரலாற்று முக்கியத்துவம்மிக்க நகரமும் எல்.ரீ.ரீ.ஈ இனால் இறுதியாக தக்கவைத்திருக்கப்பட்ட நகரமுமாகிய புதுக்குடியிருப்பு நகரமானது 3 ஆம் திகதி பங்குனியில் 58 ஆவது மற்றும் 53 ஆவது பிரிவுகளின் படைகளால் கைப்பற்றப்பட்டது. இக்கால கட்டத்தின் போது அரச படைகள்

எல்.ரீ.ரீ.ஈ இனரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த 37 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பனைக் கைப்பற்றக் கூடியனவாக இருந்தன. 20 ஆவது கஜபா படைப்பிரிவின் காலாட்படை, இலங்கை சிங்க படைப்பிரிவு, மற்றும் 581 பிரிகேட்டின் இலங்கையின் 11 காலாட்படை ஆகியன இரணைப்பாலைச் சந்தியைக் கைப்பற்றின, அத்துடன் 58 ஆவது பிரிவானது பாதுகாப்பு வலயத்திலிருந்து இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள, புதுக்குடியிருப்பிற்குச் செல்லும் வீதியை முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளது. அரச படைகள் “யுத்த சூனியப் பிரதேசத்தை” நோக்கி நகர்ந்தமையைத் தொடர்ந்து சென்ற வாரம் எல்.ரீ.ரீ.ஈ இனரிற்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே கடுஞ் சமர் மூண்டது. கட்டளைப் படை 8 ஆனது நந்திக் கடல் எல்லையின் வட எல்லையிலிருந்து முன்னேறும் வேளையில், 53 ஆவது பிரிவானது புதுக்குடியிருப்பிலிருந்து A-35 வீதிக்குச் சமாந்தரமாக முன்னேறிய வண்ணமுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ ஆனது பொது மக்களிடையே இறுதி வரை போராடுவதற்கான அவர்களது ஆதரவை வற்புறுத்தித் துண்டுப்பிரசுரங்களை வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது. ஐ.நா முகவர் அமைப்புக்களுக்கமைவாக 200,000 பொதுமக்கள் வன்னிப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ளனர், அதே சமயம் அரச எண்ணிக்கைகள் 50,000 இற்கும் 70,000 இற்கும் இடையில் தெரிவிக்கின்றன. ஐ.நா பிரதிநிதி இலங்கைக்கான விஜயத்தின் போது நாளாந்தம் டசின் கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், பலர் காயமடையவும் செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளார். இராணுவமானது தை மாதத்திலிருந்து 47,000 இலும் அதிகமான பொதுமக்கள் இராணுவப் பாதுகாப்பை நாடியுள்ளதாகத் தெரிவிக்கின்றது.

இலங்கை இராணுவத்தின் 55 ஆவது பிரிவானது புதுமாத்தளனின் தெற்கிலிருந்து முன்னேறுகின்றது, 553 பிரிகேட்டுடன் இணைந்துள்ள 1 சிலோன் மெது காலாட்படையானது புதுமாத்தளனில் உள்ள பட்டிக்கரைக்கு முன்னேறியுள்ளது. பயங்கரவாதிகள் தொடர்ச்சியாக தமது சொந்த வளங்களைப் பாதுகாப்பதனூடாக எதிரியின் வளங்களை அழிவடையச் செய்யும் ஒரு தந்திரோபாயமாகிய போர்த் தந்திரோபாயத்தைக் கடைப்பிடிப்பதனால் படைகள் மூர்க்கத்தனத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளன. எல்.ரீ.ரீ.ஈ இனரின் கட்டுப்பாட்டிலுள்ள சில கிலோமீற்றர்களைக் கைப்பற்றுவதற்கு கால அவகாசம் வேண்டியுள்ளமைக்கு இது காரணமாகலாம்.

அம்பாறையிலுள்ள கராமெட்டியவில் ஒரு கிராமவாசியின் கொலையினைத் தொடர்ந்து, சியம்பலந்துவ, லகுகல, குலண்ணுவாகே, பக்மிட்டியாவ, பண்ணல்கம, மற்றும் மாந்தோட்டம் ஆகிய ஆறு கிராமங்களில் பாதுகாப்பானது பலப்படுத்தப்பட்டுள்ளது. கராமெட்டியவின் சில கிராமவாசிகள் சம்பவத்திற்கான காரணத்தைச் சுட்டிக் காட்டியுள்ளனர், அதாவது கிராமமானது நிர்வாக ரீதியாக மொனராகலை மாவட்டத்திற்கு சொந்தமாகவுள்ள போதும், அது அம்பாறை பொலீசிற்குக் கீழாகவுள்ளது. இக்குழப்பமானது பாதுகாப்பின்மைக்கு இட்டுச் சென்றுள்ளது.

ஊடகத் துறைக்கு எதிரான தாக்குதல் தொடர்கின்றது, பிந்திய பலிக்கடாக்கள் கடத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்ட சுடரொளி ஆசிரியர் என். வித்தியாதரனும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் முன்னய தலைவராகிய கலாநிதி கங்காநாத் திசாநாயக்கவும் ஆவர். பயங்கரவாதமானது பங்குனி 2 ஆம் திகதி பாகிஸ்தானின் லாகூரில் இலங்கைக் கிறிக்கட் வீரர்களின் மீதான தாக்குதலுடன் கிறிக்கட்டையும் சென்றடைந்துள்ளது, ஆறு வீரர்களைக் காயப்படுத்தியும் எட்டு பாகிஸ்தானியர்களைக் கொன்றும் உள்ளது.

A-9 யாழ்ப்பாண-கண்டி நெடுஞ்சாலையானது 27 வருடங்களின் பின்னர் பிரதானமாக படைகளின் விநியோகங்களிற்காகவும், போக்குவரத்திற்காகவும் பங்குனி 2 ஆம் திகதி வைபவரீதியாக மீளத்-திறக்கபபட்டது. போர் நிறுத்த உடன்படிக்கையானது கைச்சாத்திடப்பட்டதும், A-9 ஆனது மீளத்-திறக்கப்பட்டது, ஆனால் ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட பிரதேசமானது எல்.ரீ.ரீ.ஈ இனரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

மாத்தறையிலுள்ள அக்குரஸ்ஸவில் ஒரு தேசிய நிகழ்வில் ஒரு தற்கொலைக் குண்டுதாரி ஊடுருவிய போது பதின்நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், ஒரு அரச அமைச்சர் உள்ளடங்கலாக பலர் காயப்படுத்தப்பட்டனர்.

*“நாம் யாவரும் ஒன்றாக மரணிக்கப் போகின்றோம் அல்லது ஒன்றாக வாழக் கற்றுக்கொள்ளப் போகின்றோம், அத்துடன் ஒன்றாக வாழ்வதானால் நாம் பேசிக்கொள்ள வேண்டும்.”* ***எலேனர் றூசெவெல்ற்.***

## மனித உரிமைகள்

***மாசி 21 இலிருந்து பங்குனி 20 வரைக்குமான மனிதவுரிமை ஆய்வு***
கீழேயுள்ள அட்டவணையானது அச்சு ஊடகத்திலும் இலத்திரனியல் ஊடகத்திலும் கிடைக்கக் கூடியதாகவுள்ள பல்வேறு செய்திக் கொத்துகளில் அறிக்கையிடப்பட்டுள்ள மனிதவுரிமை மீறல்களை எடுத்துரைக்கின்றது. (ஐலண்ட, டெய்லி மிறர், டெய்லி நியூஸ், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி, லங்கா பேஜ், மற்றும் CHA மாவட்ட அலுவலகம்)

| கடத்தல் **12** |
|---|
| கொழும்பு 5 |
| வவுனியா 3 |
| புத்தளம் 3 |
| மன்னார் 1 |

| கைது **275** |
|---|
| மாத்தறை 141 |
| கொழும்பு 55 |
| வவுனியா 35 |
| நுவரெலியா 15 |
| கம்பஹா 13 |
| தி.கோணமலை12 |
| மன்னார் 3 |
| அ-புரம் 1 |

| காணாமல் |
|---|
| மன்னார் 5 |
| மட்டக்களப்பு 1 |
| கொழும்பு 1 |
| காலி 1 |

| காயம் **432** |
|---|
| முல்லைத்தீவு 380 |
| மாத்தறை 40 |
| அம்பாறை 11 |
| மட்டக்களப்பு 1 |

| இறப்பு/கொலை |
|---|
| முல்லைத்தீவு 106 |
| அம்பாறை 19 |
| மாத்தறை 15 |
| மட்டக்களப்பு 11 |
| மன்னார் 4 |
| தி.கோணமலை 3 |
| மட்டக்களப்பு 1 |
| யுாழ்ப்பாணம்1 |
| குருநாகல் 1 |
| வவுனியா 1 |

| **இறப்புகள்/கொலைகள் 162** |
|---|
| குண்டு / எறிகணை |
| சுடுகை 42 |
| இனங்காணப்பட்ட இறந்த உடல்கள் **5** |

| **காயம் 432** |
|---|
| குண்டு/எறிகணை 352 |
| சுடுகை 41 |
| தற்கொலைத் தாக்குதல் 40 |

### *இக்கால கட்டத்தின் போதான சில முக்கிய நிகழ்வுகள்*

- எல்.ரீ.ரீ.ஈ போராளிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக இங்கினியாகலையிலுள்ள கராமெட்டியவில் 16 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 10 பேர் பாரதுாரமான காயங்களிற்கு உள்ளாகினர்.
- பங்குனி 16 ஆம் திகதியன்று புத்தளத்தில் 03 முஸ்லிம்கள் ஒரு வெள்வை வானில் கடத்தப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
- கொழும்பானது எல்.ரீ.ரீ.ஈ இனரின் வான் தாக்குதல் மூலமாக தாக்கப்பட்டு அடுத்தநாள் அவிசாவளையிலுள்ள ஒரு தமிழ் கிராமமானது இனந்தெரியாத குழுவினரால் தாக்கப்பட்டது. ஒரு நபர் கொல்லப்பட்தாகவும் உடமைகள் சேதப்படுத்தப்பட்டதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம்கண்டி A-9 வீதியானது பாதுகாப்புப் படைகளினது போக்குவரத்திற்காகவும் உணவு விநியோகத்திற்காகவும் திறக்கப்பட்டது.
- சுடரொளி பிரதம ஆசிரியர் என். வித்தியாதரன் ஒரு குடும்ப மரண வீட்டில் இருந்த போது கைதுசெய்யப்பட்டார்.
- வவுனியாவிலுள்ள முகாமில் தீயினால் சேதம் ஏற்பட்டது, மின்சாரம் பாய்ந்தமையினால் ஏற்பட்டிருக்கலாம்.
- போரின் பிடியிலுள்ள பிரதேசத்திலுள்ள பெற்றோரைக் பார்க்க இயலாமையினால் கிழக்குப் பல்கலைக்கழக மாணவியொருவர் விடுதிப் படுக்கறையில் துாக்கிட்டுத் தற்கொலை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.
- உணவின்மை காரணமாக புதுமாத்தளனில் 13 பொதுமக்கள் இறந்தமை பதியப்பட்டுள்ளது – (வைத்தியக் கலாநிதி பி. வரதராஜன், முல்லைத்தீவு சுகாதாரப் பணிமனை ஆணையாளர்)
- மாத்தறை அக்குரஸ்ஸவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் ஆகக் குறைந்தது 13 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் அமைச்சர் மகிந்த விஜேசேகர உட்பட ஏனைய 41 பேர் காயமுற்றனர்.
- அக்குரஸ்ஸ குண்டுவெடிப்பினைத் தொடரந்து மாத்தறையில் 141 தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்டனர்.
- இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவராகிய கலாநிதி. டம்மிக்க திசநாயக்க அவரது வதிவிடத்திலிருந்து கடத்தப்பட்டதுடன், மறுநாளே விடுவிக்கப்பட்டார்.
- வாளைச்சேனையிலிருந்து கல்முனைக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பேருந்தானது இனங்காணப்படாத ஆயுததரிகளினால் தீக்கிரையாக்கப்பட்டது.
- கடத்தப்பட்ட பெண் ஆசிரியர் வெள்ளவத்தையிலுள்ள அவரது வீட்டிற்கு முன்பாக விடுவிக்கப்பட்டார்.
- திருகோணமலையில் ஆறு வயதுடைய ஒரு சிறுமி கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம்களிலிருந்து 64 முதியோர்கள் அவர்களது உறவினர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டனர்.
- முன்னார் வைத்தியசாலையில் 02 தாய்மார்களும் 03 சிறுவர்களும் காணாமற் போயுள்ளனர்.
- எறிகணை வீச்சில் "CARE" உதவிப்பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.
- ரூபெல்லா தடுப்பூசியின் காரணமாக பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். மாத்தறை வைத்தியசாலையில் 26 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.
- அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் 2 த.ம.வி.பு அங்கத்தினர்கள் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இறந்தனர்.

### *கைதுகளும் கடத்தல்களும்*

அறிக்கையிடப்பட்ட காலப் பகுதியில் உரிய ஆவணங்கள் இன்மையினாலோ அல்லது குறித்த பகுதியில் காணப்பட்டமைக்கான ஒரு ஏற்றுக் கொள்ளத்தக்க காரணத்தைக் கொண்டிராமையினாலோ தேடுதல் நடவடிக்கைகளின் போது சந்தேகத்தின் பேரில் 275 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தகவல்களிற்கமைய சந்தேகத்தின் பேரில் அதிகளவிலானோர் (141) மாத்தறையிலுள்ள அக்குரஸ்ஸவிலேயே கைதுசெய்யப்பட்டனர், இது அக்குரஸ்ஸவில் ஏற்பட்ட குண்டு வெடிப்பினால் ஆகும். பொலிசினதும் இராணுவத்தினதும் ஒரு இணைந்த தேடுதல் நடவடிக்கையின் போது தமது அடையாளத்தை உறுதிப்படுத்தத் தவறியமையினால் அல்லது வெள்ளவத்தையில் காணப்பட்டமைக்கான காரணத்தை நிரூபிக்கதத் தவறியமையினால் 39 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இக்காலப் பகுதியின் போது கடத்தப்பட்ட பெரும்பாலானவர்கள் வீட்டுக்குத் திரும்பினர். கொழும்பு மாவட்டத்தில் கடத்தப்பட்ட 05 பேரில் 04 பேர் வீடு திரும்பினர். வவுனியாவில் 02 பேர் வீட்டுக்குத் திரும்பினர், அத்துடன் புத்தளத்தில் ஒருவர் திரும்பினார். அதே சமயம் மன்னாரில் இரு தாய்மார்களும் மன்னார் வைத்தியசாலையில் மூன்று பிள்ளைகளும் காணாமல் போயினர்.

### *கொலைகளும் காயங்களும்*

தமிழ் பத்திரிகைகளிற்கமைய எறிகணை மற்றும் குண்டு வீச்சு காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 106 பொதுமக்கள் கொல்லப்பட்டு 380 பேர் காயத்திற்கும் உள்ளாக்கப்பட்டனர். அக்குரஸ்ஸவில் மேற்கொல்லப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் போது 15 பொதுமக்கள் கொல்லப்பட்டனர், எல்.ரீ.ரீ.ஈ போராளிகளின் ஒரு குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக இங்கினியாகலையிலுள்ள கராமெட்டியவில் 16 பேர் கொல்லப்பட்டதுடன் 10 பேர் பாரதுாரமான காயங்களிற்கு உள்ளாகினர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னய காலங்களுடன் ஒப்பிடுகையில் மனிதவுரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

(மேலதிக தகவல்களும் புள்ளி விபரங்களும் hrac1@cha.lk ன்ற இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம்)

# பொருளாதாரச் சூழ்நிலை



பங்குனிக்குரிய சிறந்த பொருளாதார தகவலானது பண வீக்கம் 7.6%இலிருந்து 5.3% இற்கு குறைவடைந்தமையாகும். இலங்கையின் இரு வங்கிகளாகிய, ஹற்றன் நஷனல் வங்கி, மற்றும் DFCC ஆகியன "ஆண்டின் சிறந்த வங்கி" என்ற உயர்ந்த வங்கி விருதிற்காக உலகளாவிய ரீதியில் FT/IFC நிலைத்திருக்கும் வங்கிப் போட்டியாளர் 2009 இற்குத் தெரிவு செய்யப்பட்ட 22 வங்கிகளினுள் ஒன்றாகும். இது இலங்கை வங்கியாளர்களிற்கான ஒரு கௌரவமாகும்.

LMD-நீல்சன் வியாபார நம்பிக்கைச் சுட்டியானது தையின் 96 உடன் ஒப்பிடுகையில் மாசியில் 122 என்ற உயர்ந்த நிலையினை அடைந்தது, ஏனெனில் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையானது பெரும்பாலும் முடிவிற்கு வருவது புலனாகிறது. ஆனாலும் இவ்வெதிர்பார்ப்பானது நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது.

நிதி நெருக்கடியானது பங்குனியில் இறுகியது. ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியப் பிரச்சினையைச் சீர்செய்வதற்கு தேவையான ரூ 15 பில்லியனை கொண்டிருக்கவில்லையென அரசாங்கமானது அறிவித்தது. சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கத்திற்காக ஈரானினால் 1.0 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுடன் அளிக்கப்படவிருந்த நிதியுதவியானது அத்திட்டத்திற்காக இலங்கை 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை உயர்த்தத் தவறியமையினால் அபாயத்திலுள்ளது. எவ்வாறெனினும் மிஹின் எயாரானது ஒரு வங்கிக் கடனை அடைப்பதற்காக திறைசேரியிலிருந்து இன்னொரு 350 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக் கொண்டது.

அரசாங்கமானது தற்போதுள்ள ரூ 600 பில்லியனிலிருந்து ரூ 750 பில்லியனிற்கு திறைசேரி விலைப்பட்டியலை உயர்த்துவதற்காக பாராளுமன்ற அங்கீகாரத்தை எதிர்பார்த்துள்ளது.

தை-மாசி வரையிலான இலங்கைக்கான உல்லாசப் பிரயாணிகளின் வருகையானது 2008 இல் அதே மாதங்களுடன் ஒப்பிடுகையில் 25.5% இனால் குறைவடைந்தது.

இலங்கையிலுள்ள பிரதான ஏற்றுமதியாளர்கள் உலகளாவிய வீழ்ச்சியினால் சிறிதளவில் மாத்திரமே பாதிக்கப்பட்டனர். ஏழு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சேவையானது 2005 இன் நடுப்பகுதிக்கும் 2009 இன் தொடக்கத்திற்கும் இடையில் 75 தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன எனத் தெரிவிக்கின்றது. இலங்கையில் செயற்படும் உறுதியான ஆடைக் கொள்வனவாளர்களின் எண்ணிக்கையானது 2005 இலிருந்த 50 இலிருந்து தற்பொழுது 30 ஆகக் குறைவடைந்துள்ளது. உலகளாவிய வீழ்ச்சி தவிர, பிரதான காரணங்களாவன உயர் உற்பத்தி விலை, சீரற்ற பாதுகாப்பு நிலவரம் மற்றும் ரூபாயின் அதிகரித்த பெறுமதி என்பனவாகும்.

தென் இந்தியா, கென்யா மற்றும் இலங்கையில் ஏற்பட்ட வறட்சியினால் உலகளாவிய விநியோகத்தில் எற்பட்ட குறுகியதொரு வீழ்ச்சியின் காரணமாக தேயிலை விலைகள் உயர்ந்தன. ஆனால் உயர் விலையிலிருந்தான இலாபமானது தாழ் உற்பத்தியினால் சமப்படுத்தப்படுகின்றது. மேலும், இலங்கைத் தேயிலை தொழிலின் தொழிலாளர் உற்பத்தித் திறனானது கிட்டத்தட்ட இந்தியாவினது இரண்டில் மூன்று பங்கும் கென்யாவினது 55% உம் மட்டுமே

ஆகும். இவ்விரும்பத்தகாத சூழ்நிலைகளின் காரணமாக இலங்கைத் தேயிலையானது எகிப்து, பாகிஸ்தான், இங்கிலாந்து, ஆப்கானிஸ்தான், பிரதானமாக கென்யாவிற்கான சந்தை விலையினை இழந்துள்ளது. ரூபாயின் அதிகரித்த பெறுமதியும் கூட எமது தேயிலையினை போட்டி குறைந்ததாக உருவாக்கியுள்ளது.

உள்ளூர் வியாபாரச் சமூகத்திடமிருந்து எதிர்த்தரப்பினுள் கைநழுவிச் சென்றுள்ள முன்னைய இலவச வியாபார ஒப்பந்தத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவுடனான முழுமையான பொருளாதார பங்களிப்பு ஒப்பந்தத்தின் (CEPA) பேரத்தை அரசாங்கமானது புதுப்பிக்க முயற்சிக்கின்றது, அது இந்தியாவானது இலங்கை ஏற்றுமதிகளிற்கு எதிராக சுங்கவரியற்ற தடைகளைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும்.

அரசாங்கமானது திரவப் பெற்றோலியம் வாயுவின் (LPG) மீதான இறக்குமதித் தடையை நீக்கியுள்ளமையானது செறமிக் ஏற்றுமதியாளர்கள் போன்ற தொழிலுக்குரிய பாவனையாளர்களிற்கு கடந்த மார்கழியில் ஆறுதலையழித்துள்ளது.

ஏற்றுமதிக் கட்டளைகள் குறைவடைந்ததன் காரணமாக வேலை வாரங்களை மட்டுப்படுத்தப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் நிலைக்குள்ளான தொழிலாளர்களை அனுமதிப்பதற்கான தொழிலாளர் கூட்டமைப்பின் வேண்டுகோளிற்கு அரசாங்கமானது முறைப்படியாகப் பதிலளிக்கவில்லை. எவ்வாறெனினும், வீழ்ச்சியிலிருந்து பிழைத்திருப்பதற்காக பல தொழிலாளர்கள் அந்நிலையினை எதிர் கொண்டுள்ளனர்.

பங்குனி பிற்பகுதியளவில் மத்திய வங்கியினால் கையாளப்பட்ட வெளிநாட்டு ஒதுக்கலின் அளவானது ஒரு உறுதியற்ற 900 அமெரிக்க டொலர்களிற்கு வீழ்ச்சியடைந்தது. இது அரசாங்கத்தினை IMF இடமிருந்து ஒரு அவசர கடனாக 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கோரும் கட்டாயத்திற்கு உள்ளாக்கியது. இக்கடனானது உணர்வு பூரமான படிகளாகிய ரூபாயின் பெறுமதியைக் குறைத்தல், அரச வேலைகளிற்காக வாடகைக்கு அமர்த்துவதைக் குறைத்தல், மற்றும் வரவுசெலவுத் திட்டத்தில் குறைப்பு ஆகிய நிபந்தனைகளுடன் கிடைக்கவுள்ளது.

## சுற்றுச் சூழல்

மாசியிலிருந்து பங்குனி ஆரம்பம் வரை தொடர்ந்த நீண்ட வறட்சிக் காலமானது விவசாயத் துறையில் விவசாயிகளின் பயிர் இழப்புகளுடன் பலதரப்பட்ட எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களாவன உலர் வலயத்தில் கதிர்காமம், அனுராதபுரம் ஆகியனவும், அதே போல் தேயிலை உற்பத்தி மூன்றிலொரு பங்கினால் குறைவடைந்த முழு மலைநாடுமாகும். அண்மைய ஈரலிப்பான காலநிலையானது ஒரு புத்துயிர்ப்பிற்கு வழிசெய்யும் எவ்வாறெனினும், மழை தொடர்ந்தாலும், நீர்த்தேக்க மட்டங்கள் தற்போதும் குறைவாகவே உள்ளன, மஸ்கெலியா, விக்டோரியா நீர்த்தேக்கங்களின் வற்றுதலுடன் நீர்த்தேக்கங்களின் கட்டுமானத்தின் போது அமிழ்த்தப்பட்ட பழைய மஸ்கெலியா, தெல்தெனியா ஆகிய நகரங்கள் மீண்டும் மேற்பரப்பில் வெளித்தெரிகின்றன. எவ்வாறெனினும், வடக்கில் பங்குனி 9, 10 ஆம் திகதிகளில் ஏற்பட்ட பலத்த மழையின் காரணமாக பங்குனித் தொடக்கத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கானது "பாதுகாப்பு வலயத்தில்" உள்ள IDP களைப் பாரதூரமாகப் பாதித்தது. சிறு தீவுகளில் வாழ்ந்து கொண்டிருந்த பல குடும்பங்கள் நீரினால் சூழப்பட்டன. அதிகரித்த மழையானது இடி, மின்னலின் அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. ஏற்கனவே தேயிலை கொய்வோர் பங்குனியில் மின்னலினால் பாதிப்புற்று. இரு இறப்புக்கள் ஏற்பட்டமைக்கான பதிவு உண்டு.

மாநகராட்சி நிலங்களில் சேரும் பெருமளவிலான திண்மக் கழிவுகளின் கொட்டப்படலிற்காக ஒரு புதிய தீர்வானது முன்வைக்கப்பட்டது. சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் (MENR) அமைச்சர் அவர்கள் மாநகரசபைகள் தமாகவே கழிவுகள் கொட்டப்படும் நிலங்களை சுத்தப்படுத்தாவிட்டால் அவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கான MENR இற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை அண்மையில் பெற்றுக் கொண்டுள்ளார். பின்னர் MENR ஆனது இக்கழிவினைக் கொட்டுவதற்கான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும். அத்துடன், கழிவு முகாமைத்தும் தொடர்பாக, கைத்தொலைபேசிகளினூடாக பங்குனி ஆரம்பத்தில் அமைச்சரவையானது இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 16 மில்லியன் கைத்தொலைபேசி பற்றரிகள் வீசப்படுகின்றன என்பதை விளக்கும் ஒரு வரி விதிப்பினை அனுப்பியுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள அதிகளவிலான IDPகளிற்கு இருப்பிடத் தேவை காணப்படுகின்றது. இதன் விளைவாக கூடாரங்களையும் தற்காலிக இருப்பிடங்களையும் ஏற்படுத்துவதற்காக பெருமளவிலான காட்டு நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கண்மூடித்தனமான துப்புரவுப் பயன்பாடானது முகாம்கள் வெப்பம், வெள்ளப்பெருக்கு போன்றவற்றிற்கு உள்ளாக்கப்பட வழிவகுக்கின்றது. பாரிய ஆயுதங்களின் பாவனையினால் ஏற்பட்டுள்ள நிழல் மரங்களின் அகற்றுகையும் மண்ணரிப்பும் அப்பிரதேம், மற்றும் மக்களின் சூழல் பாதுகாப்பினைக் கட்டாயத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

## சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களுக்கான இடம்

"ஐயத்திற்கிடமின்றி யுத்த வெற்றிகள் உடனடியாகவே அரசாங்கத்தினையும் நாட்டினையும் பலப்படுத்தியுள்ள அதே வேளை எதிர்த்தரப்புகளைப் பலவீனமடையச் செய்துள்ளன. அரசாங்கமும் நாடும் அதிகாரச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்காக இந்நிலைமையை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் ...." ஜனாதிபதி ஆலோசகர் திரு. வாசுதேவ நாணயக்காரவினால் பங்குனி 12 ஆம் திகதி ஜனநாயகத்திற்கான ஒரு மக்கள் அசைவை ஏற்படுத்துவதற்காக இலங்கை பவுண்டேசன் நிறுவனத்தில் நடாத்தப்பட்ட ஒரு பாராளுமன்றக் கலந்துரையாடலில் ஜனநாயகத்திற்கான மக்கள் அசைவு ஏன் என்றதொரு தலைப்பினைக் கொண்ட ஒரு துண்டுப்பிரசுரமானது விநியோகிக்கப்பட்டது. இது ஒரு சில கல்வியலாளர்களின் ஒரு துணிகர முயற்சியாகும், இது விரைவிலேயே பெரும்பாலும் சகல சமூகத்தையும் சார்ந்த பல நேர்மையான, சிறந்த எண்ணமுடைய பிரஜைகள் கடந்தகால முட்டாள்தனத்தை மீட்பதற்கும் அவர்களுடைய அதிக தனித்துவத் தன்மையுடைய உயர்வான வண்ணமயமான ஒளியினூடு ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்குவதற்குமான ஒரு கருத்தரங்காக மாற்றமடைந்தது. அது எடுத்து விளக்கியது என்னவென்றால் எவ்வாறு எல்.ரீ.ரீ.ஈ இற்கு எதிரானதொரு தீர்மானமான வெற்றியானது இனவாதத்தை இல்லாது ஒழிக்க ஊக்குவித்தது என்பதாகும், அதற்கான இறுதி விளைவானது அவர்களது புரிந்துணர்விற்கு தற்போதும் ஒரு சவாலாகவுள்ளது. பொதுச் சமூகமானது இன்னும் உறுதியாக வேண்டும் என்ற திரு வாசுதேவ நாயக்காரவின் கூற்று நம்பிக்கையற்றதொன்றாகவுள்ளது. பயங்கரவாதத்தை இல்லாதொழித்தல் என்பதன் உண்மையான பொருள் என்ன? மனிதவுரிமை மீறல்களற்றதும் சட்டவிதிகளிற்கு உட்பட்டதுமானதொரு சமூகத்தை உருவாக்கும் ஒரு செயற்பாடு என்பதாகும்? அல்லது மனிதவுரிமை மீறல்களிற்கும் எதிர்காலத்தின் நிச்சயமற்ற தன்மைக்கும் முயற்சி செய்த எமது மக்களில் பெரும்பகுதியினரை அது அமைதிப்படுத்தும் ஒரு அரசியல் முயற்சியாக இருந்ததா? இது பின்னர் கூறப்பட்டதாக இருந்தால், பொதுச் சமூகமானது இன/சமூகப் பாகுபாட்டுப் போக்கை இல்லாதொழிப்பதில் அதிக முன்னெச்சரிக்கை உடையதாக இருந்திருக்கும்.

எவ்வாறெனினும் திரு. நாணயக்கார அவர்கள் விபரித்த அரசாங்கத்தின் முன்னெபோதும் இல்லாத பலத்தையும் எதிர்த்தரப்புகளின் தொடர்ச்சியான பலவீனத்தையும் கலாநிதி டயன ஜயதிலக்க ஆராய்ந்துள்ளார்.

*"இம்மனவுறுதியானது ஆதரவுள்ள சனத்தொகை அடித்தளத்திலிருந்து வருவிக்கப்பட்டது, யுத்தத்திற்கான உயிர்ப்பான ஆதரவானது ஆகக்குறைந்தது 75% இலிருந்து ஆகக்கூடியது 83%-93% ஆகவிருப்பது ஐயத்திற்கிடமின்றிப் புலப்படுகின்றது. அதாவது அவர்கள் பிரதானமாகவும், பிரத்தியேகமாகவும் சிங்கள மக்கள் ஆவர், அவர்கள் தமது ஆதரவின் மூலமும் உயிர்த்தியாகத்தின் மூலமும் இராணுவ வெற்றிக்கான அத்திவாரத்தை வழங்கியுள்ளனர். என கலாநிதி ஜயதிலக்க தெரிவிக்கின்றார்*

*இது என்னத்தைப் பகிரங்கப்படுத்துகின்றது என்றால், மக்கள், ஆயுதம் தாங்கிய படையினர் மற்றும் அரசியல் தலைமைத்துவத்திற்கிடையிலான ஒரு இயல்பான ஒத்துழைப்பு; அரசிற்கும் சமூகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு, இது வரலாற்று ரீதியில் அரிதாகவுள்ளது. முதலாவது*

*தடவையாக இம்மத்திய விடயம் பற்றி மக்களை செவிமடுக்கச் செய்ததொரு தலைமைத்துவத்தை நாம் கொண்டுள்ளோம், அது தானாகவே மக்களது வெற்றிக்கான ஒரு கருவியாக மாறியுள்ளது. இதுவே 2008 இன் வெற்றிக்கான இரகசியமும் இவ்வாண்டின் பிதான இயல்புகளில் ஒன்றுமாகும்."**

கலாநிதி ஜயதிலக்கே அவர்கள் திரு. நாணயக்காரவைக் குழப்பத்திற்கு உள்ளாக்குவதாகப் புலனாவதை ஒரு வரலாற்றுக்குரிய அரும்பொருள் என விபரிக்கின்றார்.

பங்குனி மாதத்தில் ஊடகமும் அதனது பயங்கரவாதத்தின் மீதான பரந்ததும் நேர்மையானதுமான பார்வைக்கு மேலதிகமாக பல விடயங்களில் கவனத்தைச் செலுத்தியுள்ளது. பொருளாதாரத்தின் ஆபத்து நிறைந்த நிலை, பல நிதி நிறுவனங்களின் தளர்வு, மற்றும் ஒரு ஒழுங்குமுறையுள்ள பொதுமக்கள் சேவைக்கான தேவை ஆகியன அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடங்கள் இரண்டினதும் கவனத்தை ஈர்த்துள்ளமையானது அவை நடைமுறைப்படுத்தும் சுய தணிக்கையின் ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க இலகுவாக்கத்திற்கான நம்பிக்கை இன்னும் உள்ளது என்பதனைக் காட்டுகின்றது.

# மனிதநேயம் மற்றும் அபிவிருத்திக்கான இடம்

**வடக்கு**

நுழைவு/வெளியேறும் வாயில்களில் நிகழ்ந்த எறிகணை வீச்சுக்களின் காரணமாக 2006 ஆவணியில் A9 வீதியின் மூடுகையைத் தொடர்ந்து பங்குனி 10 ஆம் திகதியன்று பாதுகாப்புப் படைகளின் வழித்துணையுடன் 22 உணவு லொறிகளின் ஒரு தொடரானது A9 வீதியினூடாக முதலாவது தடவையாக யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்துள்ளது. அத்தொடரணியானது கொழும்புக்குத் திரும்பிய போது, மரக்கறி வகைகள், மற்றும் கருவாடுகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்துள்ளன. பங்குனி 16 ஆம் திகதியளவில் வன்னியிலிருந்து 3,539 பேர் யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர். வன்னி IDPகள் ஆறு IDP முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் (கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (463 IDPகள்), யாழ்ப்பாணம் பழைய நீதிமன்ற வீடு (113 IDPகள்), மிருசுவில் RCTMS தேவாலயம் (1,313 IDPகள்), கொடிகாமம் GTMS பாடசாலை (706 IDPகள்), கைதடி இந்து சிறுவர் இல்லம் (184 IDPகள்), மற்றும் கைதடி பல்கலைக்கழக விடுதி (760 IDPகள்)..
UNHCR, UNICEF, WFP மற்றும் ICRC ஆகியன முகாம்களிற்கான உதவிகளை மேற்கொள்கின்றன. சில NGOகள் புதிய வருகைகளைத் தங்கவைப்பதற்கான உதவிப் பொருட்களை வழங்குவதற்கான உதவிகளை வழங்கியுள்ளன. புதிய இரு அமைவிடங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் ஏற்கனவேயுள்ள இடங்களும் விரிவாக்கப்படுகின்றன.
யுத்தத்தினால் அதிகரித்துச் செல்லும் காயப்பட்டோரின் காரணமாக முல்லைத்தீவிலிருந்து வெளியகற்றப்படும் காயமடைந்தோரிற்கு உதவுவதன் பொருட்டு புல்மோட்டையில் ஒரு அவசர மருத்துவ வைத்தியசாலையானது அமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் காயமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதுடன், திருகோணமலை மற்றும் வவுனியாவிலுள்ள வைத்தியசாலைகள் கையாள இயலாதவையாக உள்ளன. இந்தியாவானது தேவைகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் இலங்கை அரசின் ஒத்துழைப்புடன் நிபுணர்கள், உதவி மருத்துவ ஊழியர்கள் மற்றும் வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையை ஏற்படுத்தியுள்ளது. பங்குனி 29 ஆம் திகதியளவில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் 177 நோயாளர்களும், ஏனைய பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் 1210 பேரும் உள்ளனர். புல்மோட்டையிலுள்ள கள வைத்தியசாலையில் தற்பொழுது 37 நோயாளர்கள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர், ஏனையோர் பதவியா மற்றும் புல்மோட்டையிலுள்ள ஆதார வைத்தியசாலைகளிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அதிகரித்துச் செல்லும் சிக்கல் நிலைமை மற்றும் எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்கள் சுருங்கிக் கொண்டு வருவதனாலும், வள்ளம் அல்லது நிலத்தினூடு யுதத வலயத்திலிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அடையும் மக்கள் எண்ணிக்கையானது அதிகரித்த வண்ணம் உள்ளது. பங்குனி 22 உடன் வவுனியாவில் மொத்தமாக 41,118 நபர்களை உள்ளடக்கும் 13,479 குடும்பங்கள் உள்ளன. அவர்கள் வவுனியாவில் 13 நலன்புரி நிலையங்களிலும் 2 உதவிக் கிராமங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். மீள்குடியேற்ற அமைச்சினால் கையெழுத்திடப்பட்டு வழங்கப்பட்ட ஒரு உடன்பாட்டுக் கடிதத்துடன் பல NGOகளிற்கு அனுமதியானது கொடுக்கப்பட்டுள்ளது.

மெனிக்பாம் நலன்புரிக் கிராமத்தில் நிலத்தடி நீர் மூலங்கள் போதுமற்றனவாக உள்ளதனால் நீர் விநியோகமானது ஒரு பிரச்சினைக்குரியதாகவுள்ளது. ஒரு மாற்றுவழியானது அப்பிரதேசத்திற்கு ஒரு பைப் லைனை ஏற்படுத்துவதாகும், ஆனால் தீர்வின் நிலையான தன்மை காரணமாக அது முகவர்களினால் உதவப்பட முடியாததாக உள்ளது. இன்னொரு மாற்றுவழியானது மகாவலி நீர்த்தேக்கத்திலிருந்து நீரினைப் பெற்றுக் கொள்வதாகும். இதன் விளைவாக, பயிர்ச்செய்கையானது பாதிக்கப்படின் விவசாயிகளிற்கு நஷ்டஈடானது வழங்கப்பட வேண்டும்.
அரசாங்கத்திலுள்ள உயர் அதிகாரிகளின் தலையீட்டின் காரணமாக UNDP கண்ணி வெடியகற்றும் பிரிவானது முசாலி/ சிலாவத்துறையில் கண்ணிவெடியகற்றுதலின் போது ஒரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. சேவைகளின் பொருட்டும் கண்ணிவெடியகற்றுதலிற்காகவும் 15 கிராமங்களிற்காக தகவல் சேகரிப்பானது மேற்கொள்ளப்பட்டது. மாது நெல் தோட்டத்தையும் A 32 வீதியின் இரு பக்கத்திலும் உம் மேலதிக பிரதேசங்களாகும். மாது மேற்குப் புறமானது MOD அனுமதிப் பத்திரத்தை வேண்டியுள்ளது, அத்துடன் மன்னார் DS பிரிவில் 3 பிரதேசங்களும் இனங்காணப்பட்டுள்ளன. மன்னாரில் கண்ணிவெடி அகற்றுதலிற்காக மொத்தமாக 37 கட்டளைகள் இனங்காணப்பட்டுள்ளன.

**கிழக்கு**
**திருகோணமலை**
திருகோணமலை IDP கள் குடும்பங்கள் 3,829 நபர்கள்
திருகோணமலையில் பாட்டாளிபுரத்தில் 147 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளதுடன் 120 கூடாரங்களும் வழங்கப்பட்டுள்ளன. நீரானது ஆழமான கிணற்றினூடு வழங்கப்பட வேண்டியுள்ளது. UMCOR ஆனது குழாய்க் கிணறுகளைக் கட்டுவதற்காக அணுகியுள்ளது. மீளக்குடியேற்றம் சம்பந்தமாக ஈரானிய அரசினால் 150 வீடுகள் கட்டப்படவுள்ளன. மொறாவெவ்வவில் மீளக்குடியமர்த்தல் வசதிகளின் பொருட்டு 25 விண்ணப்பதாரிகள் உதவியை எதிர்பார்த்துள்ளனர். எந்தவொரு உதவிகளும் வழங்கப்பட முன்னர் அவை உரிய உள்ளூர் அரச அமைப்புக்களிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டும்.

**மட்டக்களப்பு** IDPகள் 2,110 குடும்பங்கள் 8,001 நபர்கள்
**அம்பாறை** IDPகள் 1,078 குடும்பங்கள் 3,961 நபர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 GN பிரிவுகளிலும் கிரான் DS பிரிவிலும் மீளக்குடியமர்த்தலானது நிலுவையிலுள்ளது. பாதுகாப்பு உத்தரவாதம். சமூக நோய்களின் பரவுதலிற்கான பதிவுகள் உண்டு, குறிப்பாக சொறி-சிரங்கினால் பாதிப்புற்ற 25 பேர். PHI இந்நிலைமை தொடர்பாக அறிவித்துள்ளார். குடும்பங்களை மீளவிணைத்தலும் பாதிப்பிலுள்ள குழுக்களிற்கான விஷேட தேவைகளுமே மாவட்டத்திலுள்ள அழுத்தத்திற்குரிய விடயமாகும்.

**பொது**
அரசாங்கமானது எல்.ரீ.ரீ.ஈ இனரின் சிறுவர் ஆட்சேர்ப்பினைத் தடுப்பதற்காக அதனது தேசிய பயிற்சிப்பட்டறையை ஆரம்பித்தது. சிறுவர் போராளிகளை விடுவிப்பதற்கான கடந்தகால முயற்சிகள் தோல்வியடைந்துள்ளமையினால் சிறுவர் ஆட்சேர்ப்பினை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான ஒரு போராட்டம். மார்கழி 2008 இற்கமைய 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட அவ்வாறான எல்.ரீ.ரீ.ஈ இனரின் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை 6,288 ஆகும். இவர்களில் 3,809 பேர் ஆண்களும் 2,478 பேர் பெண்களும் ஆவர். இச்சிறுவர்கள் அவர்களது குடும்பம், பாடசாலை, சமூகத்தைக் கருத்திற் கொள்ளாது வலுக்கட்டாயமாக உள்வாங்கப்பட்டர்கள் ஆவர். அவர்கள் நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள சிறுவர்களினால் அனுபவிக்கப்படும் கல்வி, ஏனைய வசதிகளிற்கான உரிமைகளை மறுத்து உள்வாங்கப்பட்டடுள்ளனர். அவர்கள் மனிதவுரிமை மீறப்படும் ஒரு சூழ்நிலையில் வாழ்ந்துவிட்டனர், சமாதானத்தையும் சாதாரண நிலைமையையும் கொண்டதொரு சுற்றாடலில் வாழ வேண்டிய தேவையைக் கொண்டுள்ளனர்.

## வெளிச் செயற்பாட்டாளர்கள்

இலங்கையிலுள்ள சகல தலையீடுகளையும் வேறுபடுத்த வேண்டிய சிறு தேவை உள்ளது. ஐ.நா பாதுகாப்புச் சபைக்குக் கீழான மதிப்பிற்குரிய ஜோன் ஹோம்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்!

திரு ஜனாதிபதி அவர்களே, மத்தியஸ்தர்களினால் போரை நிறுத்தி மக்களை ஒரு சமாதானமான வாழ்க்கைக்குச் செல்ல அனுமதிப்பதற்கு எல்.ரீ.ரீ.ஈ இனரின் மீது மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான வற்புறுத்தல்களை நான் அறிவேன். இம்முயற்சிகள் மிக விரைவில் நிறைவேற்றப்படும் என நான் மிகவும் நம்புகின்றேன். அத்துடன் நான் பொது மக்களைப் பாதுகாப்பாக வெளியேற அனுமதிப்பதற்கு அரசாங்கமானது எந்தவொரு இறுதி இராணுவப் படையையும் சற்றுப் பின்னகர்த்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

திரு ஜனாதிபதி அவர்களே, பொது மனிதவுரிமை நடவடிக்கைத் திட்டம், அல்லது இலங்கைக்கான CHAP, 2009 ஆனது ஒரு மொத்தத் தொகையாகிய USD155 மில்லியன்களிற்காக மாசி 18 இல் ஆரம்பிக்கப்பட்டது. NGO களுடனான கூட்டிணைவுடன் ஐ.நா முகவர் நிலையங்களினால் மேற்கொள்ளப்படும் மனிதவுரிமை விடயங்களைத் துரிதப்படுத்துவதற்காக, மத்திய அவசர மறுமொழி நிதியத்திலிருந்து நான் USD 10 மில்லியனை வழங்கியுள்ளேன். இந்நிதியானது பாதுகாப்பு, உணவு, போசாக்கு, சுகாதாரம், உறையுள், நீர், ஆகிய விடயங்களிற்காகவும், அவசர கல்விக்காகவும் பயன்படுத்துவதற்காகவாகும்.

திரு ஜனாதிபதி அவர்களே, இலங்கைக்கான எனது விஜயமானது தொடர்ச்சியான யுத்தத்தின் காரணமான மனிதவுரிமை விடயங்களினை கண்ணூடாகப் பார்ப்பதனை நோக்காகக் கொண்டது. சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான கவனமானது அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அனுமதியை நடைமுறைப் படுத்துவதற்கான ஆய்வு உள்ளடங்கலாக .இதனது மிகவும் முக்கிய பாகமாகவிருக்கும்.

# மாவட்ட ரீதியிலான பகுப்பாய்வுகள் பெப்ரெவரி 28 – 28 மார்ச் 2009

## அம்பாறை

### களநிலைமைகள்

அம்பாறை மாவட்டத்தில் துணைப்படைகளின் நடவடிக்கையானது அதிகரித்துள்ளது. இங்கினியாக்கலை, கிரிமெட்டியாவ, உஹண, சொறிக்கல்முனை, சம்மாந்துறை மற்றும் சூழவுள்ள கிராமங்களிலும் குழப்பங்களும் பயமும் அதிகரித்துள்ளன. இம்மாவட்டத்தில் வழிப்பறிக் கொள்ளைகள், திருட்டுகள், கடத்தல்கள் போன்ற நிகழ்வுகள் அதிகரித்துள்ளதுடன், குழப்பத்தையும் அதிகரித்துள்ளன. அதே சமயம், பன்றாறாத்துவப் பிரதேசத்தில் T56 துப்பாக்கிகளின் ஒரு தொகையானது கண்டறியப்பட்டுள்ளதுடன், ஒரு சில தமிழ் இளைஞர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். TMVP கட்சியின் தலைவர் கருணா SLFP உடன் இணைந்ததைத் தொடரந்து

TMVP இன் தலைமைப் பீடத்தில் குழப்ப நிலையானது அதிகரித்துள்ளது. இவ்விடமாற்றத்தினைத் தொடர்ந்து, மாவட்டத்தின் நிலைமையானது எதிர்பார்ப்பிற்குரியதாகியுள்ளது, அதாவது கிழக்கு மாகாணமானது அரசாங்கத்திடமிருந்து அதிக கவனத்தைப் பெற்றுக் கொள்ளும். மாவட்டத்தின் சமூக-இடைத் தொடர்புகளும், அதே போல் அரசியல் நிலைவரமும் அண்மையில் ஒரு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்திற்கு உட்பட்டுள்ளன. இப்பிரதேசத்தின் விஷேடமாக நெடுஞ்சாலை, நீர்ப்பாசன அபிவிருத்தி ஆகிய துறைகளிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் உறுதியாகத் தொடரப்படுகின்றதுடன், மக்களிடமிருந்து சுறுசுறுப்பான ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

### செயற்பாட்டாளர்கள்

பாதுகாப்புப் படைகள், கருணா, கிழக்கு மாகாண முதலமைச்சர், மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் தற்போதய நிலவரத்தில் பிரதான பாத்திரங்களாகக் கருதப்பட முடியும்.

### மாற்றங்கள்

SLFP உடன் இணைவதற்கான கருணாவின் தீர்மானமானது மாவட்டத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதே சமயம் அவர் விலகியமையானது TMVP இனுள் குழப்பங்களை அதிகரித்துள்ளது, எவ்வாறாயினும் ஒரு வினைத்திறனுள்ள நபர் கிழக்கு மாகாணத்தின் அரசியல் முன்னேற்றத்தில் எந்தளவிற்கு நிலைத்திருக்கப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். கிழக்கு மாகாணத்தின் தேவைகளிற்காக சாத்தியமான ஆகக்கூடுதலான கவனமானது செலுத்தப்படும் என கருணா உறுதியளித்துள்ளமையினால், மற்றைய பாத்திரங்களினது ஆதரவும் தேவையென்பது தெளிவு, இவ்வுறுதி மொழியை உண்மையாக்குவதற்கு பாதுகாப்புப் படைகள் மற்றும் ஏனைய அரசியல்வாதிளும் வேண்டப்படுகின்றார்கள்.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

அரசாங்கமானது மாவட்டத்தில் உறுதிநிலையைப் பேணுவதிலும் மாவட்டத்தைக் குழப்பத்தில் ஆழ்த்திய துணைப்படைகளின் நடவடிக்கையினைப் போக்குவதிலும் கவனம் செலுத்த வேண்டிய தேவையிலுள்ளது. மாவட்டத்தில் வலுவான சமாதானத்தைப் பேணுவதன் பொருட்டு வெவ்வேறு சமுதாயங்களிற்கு இடையில் நிதி, தொழில், மற்றும் ஏனைய கிடைக்கக்கூடிய வளங்களின் பங்கிடலிலும் பாரிய கவனமானது செலுத்தப்பட வேண்டியுள்ளது.

## மட்டக்களப்பு

### களநிலைமைகள்

துணைப்படை குழுக்களிடையேயும் துணைப்படையினருக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையில் ஏற்பட்ட ஒரு சில மோதல்கள் மட்டுமே இம்மாதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் மாவட்டத்தில் மேலெழுந்தவாரியான பாதுகாப்பு நிலைவரமானது முன்னேறியுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள கடத்தல்கள் மற்றும் கொலைகளின் எண்ணிக்கையும் குறைந்துள்ளன.

மாவட்டத்தின் மக்கள் விஷேடமாக TMVP இன் அரசியல் இடமாற்றத்தினால் அதிகளவில் உள்வாங்கப்பட்டுள்ளது புலனாகின்றது. கட்சியின் தலைவர் கருணா SLFP உடன் இணைந்தமையும், தொடர்ச்சியாக TMVP இன் தலைமைத்துவம் கிழக்கு மாகாண முதலமைச்சரினால் ஏற்கப்பட்டமையும் மாவட்டத்தில் அதிகளவு கவனத்தை ஈர்த்துள்ள அதே நேரம். கிழக்கு மாகாணமானது மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக கவனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்றதொரு பொது எதிர்பார்ப்பு வெளிப்படுகின்றது.

மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், யுத்தத்தின் முடிவானது அருகாமையிலுள்ளது என்ற நம்பிக்கையின் காரணமாக, ஒரு சில இந்து ஆலயங்கள், வதிவிடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களாகியன புனருத்தாபணம் செய்யப்படுகின்றன.

### செயற்பாட்டாளர்கள்

மத்திய அமைச்சரும், TMVP இன் முன்னாள் தலைவருமாகிய கருணா, பாதுகாப்புப் படைகள், பாராளுமன்றக் குழுக்கள் மற்றும் NGO அதிகாரிகள் ஆகியோர் பிரதான பாத்திரங்களாகக் கருதப்பட முடியும்.

### மாற்றங்கள்

TMVP இன் முன்னாள் தலைவராகிய கருணா SLFP உடன் இணைந்தமையானது மாவட்டத்தின் இயக்கத்தைப் பாதித்த பிரதான விடயங்களில் ஒன்றாகும். இவ்அரசியல் இடமாற்றத்தினால் உதவி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கிழக்கு மாகாணமானது அதிகளவு கவனத்தில் கொள்ளப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே தோன்றியுள்ளது.

### உபாயங்கள் மற்றும் தெரிவுகள்

அண்மைய கடந்த காலத்தில் துணைப்படைகளின் நடவடிக்கையானது குறைக்கப்பட்டுள்ள அதே வேளை, அரசாங்கமும் பாதுகாப்புப் படைகளும் அவ்வாறான நடவடிக்கைகளை மேலும் குறைப்பதிலும், இக்குழுக்களை இல்லாது ஒழிப்பதிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும், இருந்த போதிலும் ஆங்காங்கு நடைபெறும் சம்பவங்கள் இம்மாவட்டத்தில் பயத்தினை அதிகரிக்கலாம். உள்ளூர் அரச அதிகார சபைகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான அதிகளவு சுதந்திரமானது வழங்கப்பட வேண்டும், அத்துடன் முன்வைக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கை தேவைகளை மேற்கொள்வதற்கு போதுமான நிதிகள் மாவட்டத்திற்கு வழங்கப்பட வேண்டும். மேலதிகமாக, மாவட்டத்தின் சூழ்நிலையை முன்னேற்றுவதன் பொருட்டு, சிறிதளவிலாவது சமூக-இடைத் தொடர்புகளை அதிகரிப்பதற்காக உரிய அதிகாரசபைகள் பணியாற்ற வேண்டியுள்ளன.

# கொழும்பு

**களநிலைமைகள்**

எப்பொழுதாவது நடைபெற்ற கடத்தல் மற்றும் ஊடக நிறுவனங்களின் மீதான அண்மைய தாக்குதல்களையும் அச்சுறுத்தல்களையும் இன்னொரு முறை முன்னிலைப்படுத்திய, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் (SLRC) முன்னாள் தலைவராகிய பேராசிரியர் தம்மிக்க திசாநாயக்கவின் கடத்தலும் விடுவிப்பும் தவிர கொழும்பானது ஒப்பீட்டளவில் ஒரு மந்தமான மாதத்திற்குரியதாகவுள்ளது. இம்மாதத்தின் போது பாதுகாப்பு நிகழ்வுகள் பதிவுசெய்யப்படவில்லை, இருந்த போதிலும் மாவட்ட மக்கள் கடந்த மாதத்தில் எல்.ரீ.ரீ.ஈ யினரினால் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலைத் தொடர்ந்து சாதுவான குழப்பநிலையிலேயே உள்ளனர்.

இம்மாதம் அறிவிக்கப்பட்ட 4 டெங்கு நோயாளர்களின் மரணம் இக்கொடிய நோய் மீண்டும் தலைதூக்கியுள்ளது என்பதை காட்டுகின்றது.

தேர்தல் நடைபெறும் காலங்களில் முன்னரைப்போலல்லாது அதிக கலந்துரையாடல்களோ தேர்தல் முடிவுகளின்மீது அக்கறையோ மக்கள் காட்டாததன் காரணமாக நடக்கவிருக்கும் மேல்மாகாண சபை தேர்தல் இம்மாவட்டத்தில் சிறிதளவு தாக்கத்தையே ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாதத்தின் போது இனங்காணப்படாத குழுவினால், ஆறு JVP உறுப்பினர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அரசாங்கம் கடுமையான விமர்சனத்திற்குள்ளாகியது. அதே வேளை, கொழும்பு நகர எல்லையினுள் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் முகமாக, மொறட்டுவவிலிருந்து கொழும்பிற்கு ஒரு புதிய பேருந்து சேவையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**செயற்பாட்டாளர்கள்**

அரசாங்கம், அரசியல் கட்சிகள் மற்றும் ஊடகத்துறை ஆகியன பிரதான பாத்திரங்களாகக் கருதப்பட முடியும்.

**மாற்றங்கள்**

இச்சயமத்தில் வரவுள்ள தேர்தலானது மாகாணத்தில் பிரதான நிகழ்வாகவிருக்கும், இருந்த போதிலும் வாக்காளர்களின் ஆர்வத்தில் ஒரு குறிப்பிடத்தக்களவு இழப்பானது காணப்படுகின்றது. அத்துடன் ஊடக அறிக்கைகளிற்கமைய யுத்தமானது விரைவில் முடிவிற்கு வந்து வெற்றியானது அருகாமையிலுள்ளது என மக்கள் எதிர்பார்த்துள்ளனர்.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**

பாதுகாப்புப் படைகளும் பொது மக்களும் விசேடமாக சனநெரிசல்மிக்க பொது இடங்களில் எச்சரிக்கையாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டியமை தொடரச்சியாக நினைவூட்டப்படல் வேண்டும்.

சுகாதார அமைச்சானது டெங்கு எச்சரிக்கைக்கு எதிராகச் செயற்படுகையில் நுளம்புகளிற்கான இனப்பெருக்க அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலை எவ்வாறு தவிர்ப்பது, அதே போல் மாவட்டத்தின் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய பிரதேசங்களிற்கு ஒழுங்கான விஜயங்களை மேற்கொள்ளல் மூலமாக அதிக முன்னெச்செரிக்கையாகவும் வினைத்திறனாகவும் செயற்பட வேண்டும்.

# யாழ்ப்பாணம்

**களநிலைமைகள்**

முல்லைத்தீவிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன், கடல் மார்க்கமாக யாழ்ப்பாணத்திற்கும் வந்தடைந்துள்ளனர். எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த கிட்டத்தட்ட 3000 பொதுமக்கள் தற்பொழுது யாழ்ப்பாணத்திலுள்ள முகாம்களில் உள்ளனர், அதே சமயம் இன்னும் அதிகளவிலானோர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

யாழ்ப்பணம் - கண்டி A9 வீதியானது இரண்டரை வருடங்களின் பின்னர் அரசாங்கத்தினால் வைபவ ரீதியாக திறக்கப்படவுள்ளதாகப் பிரகடனப்படுத்துள்ளது. வீதியானது ஆரம்பத்தில் வடக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் பொருட்களைப் பரிமாற்றுவதற்குப் பயன்படுத்தப்படும். ஆரம்பத்தில் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஆறு லொறிகள் பொருட்களைக் காவிச் சென்றதுடன், யாழ்ப்பாணத்திலிருந்து மீன் மற்றும் விவசாயப் பொருட்களுடன் கொழும்பிற்குத் திரும்பின. இது யாழ்ப்பாண மக்களிற்கு ஒரு பெரிய விடயமாகவிருந்து, அவர்கள் தற்பொழுது அத்தியாவசிய பொருட்களின் பலதரப்பட்ட வகைகளிற்காகவும், அதே போல் தெற்கில் அவர்களது பொருட்களிற்கான ஒரு பெரிய சந்தை வாய்ப்பிற்காகவும் எதிர்பார்த்துள்ளனர்.

சித்திரை நடுப்பகுதியிலிருந்து வீதியானது பொதுமக்கள் போக்குவரத்திற்காகத் திறக்கப்படும் என அரசாங்கமானது அறிவித்துள்ளது, அத்துடன் யாழ் மக்கள் தேவையற்ற கட்டுப்பாடுகளற்று மாவட்டத்திற்கு வெளியே பயணம் செய்வதற்காக எதிர்பார்த்துள்ளனர். அரசாங்கமானது ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரதப் பாதையை மீள்கட்டுமானம் செய்வதற்கான ஒரு நிதியினைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளது. இது நிறைவேற்றப்படின், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியே செல்வதற்கான தற்போதய தடைகளை பெருமளவில் இலகுவாக்கும்.

தற்போது மாவட்டத்தில் பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகின்றது, உதாரணமாக வடக்கில் மீளக் கைப்பற்றப்பட்ட இடங்களில் பொலிஸ் நிலையங்களை மீள உருவாக்குதல்.

**செயற்பாட்டாளர்கள்**

தற்போதய நிலையிலுள்ள பிரதான பாத்திரங்கள் அரசாங்கம், பாதுகாப்புப் படைகள், எல்.ரீ.ரீ.ஈ மற்றும் IDPகள், IDP களிற்கும், ஏனைய பாதிப்புற்ற மக்களிற்கும் மனிதாபிதான உதவிகளை வழங்குவதில் NGOகளும் ICRC உம் பிரதான அமைப்புகளாகும்.

**மாற்றங்கள்**

A9 வீதியின் திறப்புடன் போக்குவரத்திலும் ஏனைய மாவட்டங்களிற்கான பயணவழிகளிலும் ஏற்பட்ட முன்னேற்றமானது இம்மாவட்ட மக்களிற்கு அதிகளவு திருப்திகரமானதாகவுள்ளது, அதே சமயம் முன்வைக்கப்பட்டுள்ள ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புகையிரதப் பாதையின் மீள்கட்டுமானமும் எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்துள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் A9 வீதியின் திறப்புடன் குறைவடைய ஆரம்பித்துள்ளன, அதே போல் மாவட்டத்தின் உற்பத்திகளிற்கு தெற்கில் ஒரு பாரிய சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்தியுள்ளது. பிற்கூறியது மாவட்டத்தின் வாழ்க்கைத் தொழில் நடவடிக்கைகளில் ஒரு பெரிய சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், மக்களின் வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**

அரசாங்கமானது முல்லைத்தீவிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெயரும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மனிதாபிமான மற்றும் உதவி நிறுவனங்களுடன் சேரந்து அரசாங்கமானது அதிகரித்துச் செல்லும் IDP சனத்தொகையின் நலன்களையும் உறுதிசெய்வதுடன், அவர்களிற்கு உறைவிடம், உணவு, மருத்துவ வசதிகள், உடைகள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களையும் வழங்குதல் வேண்டும்.

A9 வீதியின் திறப்பானது பெரும் மகிழ்ச்சியுடன் பாராட்டப்படினும், இவ்வீதியைப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தும் பொதுமக்களினது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

அதே சமயம், NGO பணியாளர்களின் அசைவையும் பணியையும் நடாத்திச் செல்லும் வரையறைகளும் NGOகள் தமது கடமைகளை அதிக வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு வசதியாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

# மன்னார்

**களநிலைமைகள்**

எறிகணைகளினாலும் வான் குண்டுகளினாலும் காயமடைந்த பொதுமக்களின் ஒரு தொகையினர் திருகோணமலையிலும் வவுனியாவிலும் இருந்து மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர், ICRC, ஹண்டிகப் இன்டர்நஷனல், கரித்தாஸ், சர்வோதயா மற்றும் ஏனைய மனிதாபிமான நிறுவனங்களின் உதவியுடன் சுகாதார அமைப்புகள் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. தெற்கிலிருந்தான பல வைத்தியர்களும் இறுதி வருட தாதிப் பயிலுனர்களும் தற்போது மன்னார் வைத்தியசாலையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். ENT அறுவைச்சிகிச்சை நிபுணரிற்கான ஒரு உடனடித் தேவையானது காணப்படுகின்றது, ஏனெனில் 100 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் அவ்வாறான சிகச்சைக்காகக் காத்திருக்கின்றனர்.

இம்மாதத்தின் போது ஒரு சில கடத்தல் சம்பவங்களும், எழுந்தமானமான துப்பாக்கிச் சூட்டு நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன, ஆனால் அச்சுறுத்தும் தொலைபேசி அழைப்புகளும் வியாபாரிகளிடமிருந்து கப்பம் கோருதலும் தொடர்கின்றன. விட்டு விட்ட

பாதுகாப்புச் சோதனைகள் மாவட்டத்தில் தொடர்கின்றன. அதே சமயம், 13 IDP கள் இந்தியாவில் அடைக்கலம் கோரியுள்ளமையானது பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நெல் அறுவடையானது தொடங்கிவிட்டது, ஆனால் கொள்வனவு நிலைகளின் இழுப்பின் காரணமாகவும் மன்னாரிலேயே களஞ்சியப்படுத்தப்படுகின்றன, கிட்டத்தட்ட 80% ஆன அறுவடை செய்யப்பட்ட நெல்லானது வவுனியாவிற்கும் அனுராதபுரத்திற்கும் செல்கின்றது, மீதியானது மன்னாரிலுள்ள நுகர்வோரிற்கு உயர்ந்த விலையில் அரிசியாக விற்பனை செய்யப்படுகின்றது. மாவட்டத்தில் தற்பொழுது ஒரு கிலோ அரிசி கிட்டத்தட்ட ரூ. 75 ஆகும்.

இலங்கை கடற்படையினரின் போக்குவரத்துக்காகவும் அவர்களுக்கான சுடுகலன்கள் விநியோகத்திற்காகவும் வாரத்தின் 5 நாட்கள் மீன்பிடிக்கத்தடை விதிக்கப்பட்டதனால் பல மாவட்டங்களை சேர்ந்த 3000 ற்கும் அதிகமான மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். மன்னார் ஆயர் IDP முகாம்களிற்கு விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்ட அதே நேரம் இந்துக்களின் முக்கிய தினமான மகாசிவராத்திரி வைபவங்களில் அதிகளவான இந்துக்கள் பங்கேற்றனர்.

தெற்கிற்குப் பயணம் செய்வதற்கான வரையறைகள் தொடர்ந்தும் அமுலில் உள்ளன, பல பொதுமக்கள் மதவாச்சி சோதனைச்சாவடியில் வைத்துப் பயணிக்க மறுக்கப்படுகின்றனர். அதே சமயம், கடந்த இரண்டு வாரங்களாக கடும் மழையின் காரணமாக மாவட்டத்தில் மின்னஞ்சல், தொலைநகல், மற்றும் கையடக்கத் தொலைபேசி சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுவதும் வழமையாகி விட்டன.

**செயற்பாட்டாளர்கள்**
அரசாங்க அமைப்புகள், பாதுகாப்புப் படைகள், NGOகள், மற்றும் IDPகள் மாவட்டத்தில் தற்போதுள்ள பிரதான பாத்திரங்களாகும்.

**மாற்றங்கள்**
மன்னார் வைத்தியசாலையானது ஏற்கனவே அதிகளவிலான பணியாளர்களையும் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதியையும் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருப்பதனால், வன்னியிலிருந்து மன்னாரிற்கு வந்தடையும் நோயாளர்களின் அதிகரித்துச் செல்லும் எண்ணிக்கையினை சமாளிக்க இயலாதுள்ளது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
மன்னாரிலுள்ள நெல் களஞ்சியங்களினதும் அரைக்கும் ஆலைகளினதும் கட்டுமானத்திற்கு நிதி வழங்கும் பொருட்டு அரசாங்கமும், அதே சமயம் அபிவிருத்தி நிறுவனங்களும் ஒருமித்துப் பணியாற்ற முடியும், இதனால் நெல்லானது மாவட்டத்திற்கு வெளியே எடுத்துச் செல்லப்படமாட்டாது,

அதன்மூலம் பாவனையாளர்களுக்கும் விவசாயிகளும் அதிக செலவில் வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. மேலதிகமாக அதிகாரசபைகள் மன்னாரின் தெற்குப் பகுதியில் பயிரிடுவதற்கு அதிகளவான நிலங்களை அனுமதிப்பதற்கான சாத்தியம் பற்றி ஆராயலாம். மீனைக் களஞ்சியப்படுத்துவதற்காக உயர் கொள்ளளவுடைய 'குளிர்ந்த அறை' யின் கட்டுமானமும் கவனத்தில் கொள்ளப்படலாம், அதனால் தெற்கிற்கு அதிகளவிலான மீன்கள் எடுத்துச் செல்லப்படலாம்.

செட்டிக்குளத்திற்கான புகையிரதச் சேவைகளின் விரிவாக்கமும் ஆராயப்படலாம், ஏனெனில் அது பொருட்களின் காவிச் செல்லலை அதிக வினைத்திறனுடன் வசதியாக்கும், அதே சமயம் பொது மக்களின் போக்குவரத்திற்கு சில மட்டுப்படுத்தல்களை ஏற்படுத்தும்.

மனிதாபிமான முகவர் நிலையங்களும் நோயாளர்களிற்கான சத்திர சிகச்சைக்குப் பின்னரான மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம். மன்னார் மற்றும் முருங்கன் வைத்தியசாலைகளிலுள்ள குருதி வங்கிகளும் பலப்படுத்தப்படல் வேண்டும்.

இந்நிறுவனங்கள் தமது நடவடிக்கைகளை மாவட்டத்தில் பலப்படுத்துமாயின், செயற்கை அவயவங்களைப் பொருத்துதலையும் அதிகரிக்கலாம்.

## திருகோணமலை

**களநிலைமைகள்**
கிட்டத்தட்ட ஒரு வருடமாகத் திருத்த வேலைக்குட்பட்டிருந்த சேருவில-2 பயணிகள் படகானது திருகோணமலையிலிருந்து மூதூரிற்கு பயணிகளைக் கொண்டுசெல்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் விலைப் பெறுமதியின் அதிகரிப்பினால் பிரயாணிகள் மகிழ்ச்சியற்றுள்ளதுடன் விலையினைக் குறைக்குமாறும் மீள்விண்ணப்பித்துள்ளனர்.

வன்னியில் யுத்தத்தினால் காயமடைந்து திருகோணமலைகு வந்தடையும் பொதுமக்களின் எண்ணிக்கையானது தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமுள்ளது. அதிக பாரதூரமானவர்கள் உடனடியாக சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவதுடன், ஏனையவர்கள் மற்றய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மாவட்டத்தில் கடத்தல்களும் கொலைகளும் தொடர்வதனால், பல குடும்பங்கள் மனவுளைச்சலிற்கு உள்ளாகியுள்ளன. கடந்த சில வாரங்களிற்கு முன்னர் தலைப்புச் செய்திகளை நிரப்பிக் கொண்டிருந்த விடயமானது கப்பத்திற்காக ஒரு ஆறு வயதுடைய சிறுமி கடத்தப்பட்டமையாகும். இது சம்பந்தமாக ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர், அத்துடன் இரு சந்தேக நபர்கள் பொலீஸ் காவலில் இறந்துவிட்டனர்.

**செயற்பாட்டாளர்கள்**
பாதுகாப்புப் படைகள், அரசாங்க அமைப்புகள், NGOகள், மற்றும் யுத்தத்தினால் பாதிப்படைந்த பொதுமக்கள் தற்போதுள்ள பிரதான பாத்திரங்களாகும்.

**மாற்றங்கள்**
ஆறு வயதுடைய வர்'ா ஜுட் ரெஜியின் கடத்தலானது மாவட்டத்தின் இயல்பு நிலையினைப் பாதித்து, பெற்றோரையும் பாடசாலை அமைப்புகளையும் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பயத்தில் ஆழ்த்தியுள்ளது.

சந்தேகிக்கப்படும் கடத்தல்காரர்கள் ஒரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் என்பது உரிய பொலீஸ் நடவடிக்கையிலிருந்து தெளிவாகியுள்ளது.

முக்கியமாக நிதிப்பற்றாக்குறை காரணமாகவும், மனித உரிமை சம்பந்தமாக செயல்படும் குறிப்பிட்ட சில நிறுவனங்களே செயற்படுவதாலும் மனித உரிமைகள் மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண செயற்பாடுகள் மிகச்சிறிய அளவே நடைபெறுகின்றன.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**
மாவட்டத்திலுள்ள துணை இராணுவக் குழுக்களின் நடவடிக்கையானது இயன்றவரை மட்டுப்படுத்தப்பட வேண்டும். பெற்றோர்கள், விசேடமாக வெளிநாட்டில் தொழில் புரிவோர் அல்லது வியாபாரம் மேற்கொள்வோர் தமது பிள்ளைகள் பற்றிய பயத்தினைக் கொண்டுள்ளனர், அத்துடன் இறுக்கமான பாதுகாப்புக் கெடுபிடிகள் அமுலாக்கப்படவிருப்பது உறுதியாகும்.

சம்பந்தப்பட்ட அமைப்புகளும் அதிகரித்த மனிதவுரிமை மீறல்களைக் குறைப்பதில் கவனம்செலுத்த வேண்டியது அவசியமாகும்.

அதே சமயம், யுத்தம் அல்லது அடிக்கடி நிகழும் கடத்தல்கள் மற்றும் கொலைகளின் காரணமாக தமது குடும்பத் தலைவரை இழந்துள்ள குடும்பங்களிற்கு நிலைத்திருக்கத்தக்க வாழ்க்கைத் தொழில் உதவிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படல் வேண்டும்.

## வவுனியா

**களநிலைமைகள்**

வவுனியா நகரமானது திருகோணமலை வைத்தியசாலையிலிருந்து வந்த மேலதிக சிகிச்சையினை வேண்டியுள்ள 1750 நோயாளர்கள் உள்ளடங்கலாக 39000 வன்னி IDP களின் வருகையினைத் தொடர்ந்து எப்பொழுதும் சுறுசுறுப்பானதாகவுள்ளது. IDP களின் வருகையினைத் தொடர்ந்து, பெருமளவிலான பொதுமக்கள் தமது உறவினர்களைக் கண்டறிவதற்காக வந்தவண்ணமுள்ளனர். NGO, பாதுகாப்புப் படைகள், ஊடகவியலாளர்கள், அதே போல் அரசியல்வாதிகள், வெளிநாட்டு மற்றும் சமய சம்பந்தமான நிறுவனங்களின் பிரதிநிதிகள் IDP களின் பாரியளவிலான வருகையினைத் தொடர்ந்து நகரத்தில் மையங் கொண்டுள்ளனர். வன்னி IDP கள் தற்பொழுது 14 IDP முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர், அத்துடன் தங்குமிடம், உணவு, நீர் மற்றும் சுகாதார வழிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் சுகாதாரமற்ற நிலைமைகளின் காரணமாக நோய்களின் பரவுகைக்கான சாத்தியமானது காணப்படுகின்றது. இம்மேலதிக அங்கத்தினர்களைத் தங்கவைப்பதற்காக அரசாங்கமானது செட்டிக்குளம் மெனிக் முகாமில் 24000 தற்காலிக உறைவிடங்களைக் கட்டத் திட்டமிடுகின்றது.

மொத்தமாக 7500 மாணவர்கள் முகாம்களினுள் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாடசாலைகளில் கல்வி வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ள அதே வேளை, வவுனியா மாவட்டத்தின் 25,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அவர்களது பாடசாலைகள் அதிகரித்துச் செல்லும் IDP சனத்தொகைக்கு தங்குமிடம் வழங்குவதற்காக பயன்படுத்தப்படுவதனால் கல்விக்கான மார்க்கத்தை இழந்துள்ளனர். கல்வித் திணைக்களமானது இப்பாடசாலைகளை தற்காலிகமாக தேவாலயங்கள், கோவில்கள் மற்றும் ஏனைய பொதுக் கட்டடங்களில் மாற்றுவதற்கு ஒழுங்குகளைச் செய்கின்றது, ஆனால் வழங்கப்படும் வசதிகள் தேவையானதை விடக் குறைவாகவே உள்ளன.

அரசாங்கமானது முகாம்களில் உள்ள 60 வயதிற்கு மேற்பட்டோர் முகாம்களிற்கு வெளியே உறவினர்களோடு தங்குவதற்கு அனுமதியளித்துள்ளது. கிட்டத்தட்ட அவ்வாறான வயதுப் பிரிவிற்குரிய 1900 பேர் முகாம்களில் உள்ளனர், அரச அதிபரிற்கு அவ்வாறான முதியவர்களை முகாம்களிற்கு வெளியே எடுப்பதற்கான 650 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன, இது வரையில் 74 முதியவர்களிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனிதாபிமான நிறுவனங்களும் முகாம்களிலுள்ள உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டோரிற்கு ஆலோசனை வழங்கல், சக்கர நாற்காலி போன்றன வழங்குதலின் மூலமாக உதவுவதற்கான ஒழுங்குகளைச் செய்கின்றன. முகாம்களிலுள்ள 750 கர்ப்பிணிப் பெண்களிற்கு போதுமான பராமரிப்பினை வழங்குவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அதே சமயம், மன்னார் ஆயர் இம்முகாம்களிற்கு அண்மையில் விஜயம் செய்துள்ளார், தேவாலயங்களையும் கோவில்களையும் இம்முகாம்களினுள் திறப்பதற்கான திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

A9 வீதியின் திறப்பும், யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்துமான பொருட்களின் எடுத்துச் செல்லலும் மற்றும் வெவ்வேறு வகையான பொருட்களின் கிடைக்கக் கூடியதாகவுள்ள தன்மையும் மக்களை ஊக்கப்படுத்துகின்றன.

**செயற்பாட்டாளர்கள்**

உள்ளூர் அரச அமைப்புகள், பாதுகாப்புப் படைகள், IDP கள், NGOகள், தற்போதய பிரதான பாத்திரங்களாகும்.

**மாற்றங்கள்**

மாவட்டத்தினுள் அதிகரித்துள்ள IDP களின் வருகையானது மாவட்டத்தின் இயக்கத்தைப் அதிகளவில் பாதித்துள்ளது. அண்மைக்கால மழையானது IDP களிற்கு கஷ்டத்தை ஏற்படுத்தியது, ஏனெனில் நிலமும் அவர்களது உறைவிடங்களும் நீரில் மூழ்கின, மலசல கூடங்கள் நிரம்பி வழிந்தன, அத்துடன் நோய்கள் பாரதூரமாகப் பரவின.

25000 இற்கு மேற்பட்ட பிள்ளைகளின் கல்விச் சீர் குலைவானது பெற்றோர்களிடையே குழப்பத்தை விளைவித்துள்ளது ஏனெனில் தற்போது மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக வசிக்கும் IDP களை மீளக்குடியமர்த்துவதற்கான உடனடி திட்டங்கள் முன்னெடுக்கப்படாமையினால் பாடசாலைகள் மூடப்பட்டிருக்கும் காலவளவு கணிப்பிடப்பட முடியாததாகவுள்ளது, நீண்டு செல்வதாகவே தெரிகிறது.

**உபாயங்கள் மற்றும் தெரிவுகள்**

IDP களிற்கான போதிய வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காகவும் IDP களைத் தங்க வைப்பதனால் கல்வி மற்றும் வர்த்தகச் சீர்குலைவுகள் இல்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் மேலதிக IDP முகாம்கள் கட்டப்பட வேண்டும். இதனை நிறைவேற்றுவதற்காக அரசாங்கமானது பல நிதி வழங்கும் முகவர் நிலையங்களுடன் இணைந்து பணியாற்ற முடியும். வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத மெல்லிய தகரக் கூடாரங்களிற்குப் பதிலாக காலநிலை மாற்றங்களிற்கு ஈடுகொடுக்கத்தக்க வதிவிடங்களை அமைப்பதும் முக்கியமானதாகும்.

அதிக வினைத்திறனுள்ள நிர்வாகத்தையும் வளப் பயன்பாட்டையும் ஏற்படுத்தத் தக்க வகையில் IDP களிற்கு தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதும் முக்கியமானதாகும்.

மாவட்ட மக்கள் அமைதியாகவும் பயமற்றும் வாழ்வதற்கு அனுமதிக்கும் வகையில் பொலீசானது துணைப் படைகளின் செயற்பாடுகளை நிறுத்துவதற்காக அதிக விளைவுள்ள நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

**சூழ்நிலையின் துரித மதிப்பிடல் (RCA)** உள்ளூர் சூழ்நிலைகளின் மாற்றங்களை நன்கு புரிந்து கொள்வதன் அடிப்படையில் பல்வேறுபட்ட மனிதநேய மற்றும் அபிவிருத்தித் தேவைகள் குறித்து கவனம் செலுத்தும் அதிக பயனுறுதி கொண்ட இடையீடுகளைத் திட்டமிட்டு, அமுல்படுத்துவதற்கான பயனுள்ள தகவல்களை மனிதநேய மற்றும் அபிவிருத்தி முகவர் நிறுவனங்களுக்கு வழங்குவதை நோக்காகக் கொண்டுள்ளது.

அதே வேளை, சூழ்நிலைகளின் துரித மதிப்பிடல் இடையீடுகள் மாவட்டங்களின் சமாதானம் மற்றும் மோதல்நிலை மாற்றங்களுக்கு கூருணர்வுத்தன்மை கொண்டவை என்பதையும் முகவர்கள் மோதல்களை சிறிதளவேனும் உருவாக்கவோ அல்லது மோசமாக்குவதையோ தவிர்த்து மோதல் தணிப்பு/மோதல் உருமாற்றம் அல்லது சமாதானத்தைக் கட்டியெழுப்புதலில் கூடுதல் ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

சூழ்நிலைகளின் அபாயவாய்ப்புக்களை மதிப்பிடல் முகவர்களின் செயற்பாடுகளை சற்று இடைநிறுத்தி ஊழியர்கள் மற்றும் திட்டம் அமுல்படுத்தும் இடங்களிலுள்ள மக்களின் பாதுகாப்பை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

**எங்களது இணையத்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள்**

**http://www.humanitarian-srilanka.org/Knowledge_Centre/Publications.php**

இந்த அறிக்கை மீதான உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை வரவேற்கிறோம், அவற்றை பின்வரும் மின்னஞ்சல்/தபால் முகவரிக்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும்: feedback@cha.lk

மனிதநேய அமைப்புக்களுக்கான கூட்டமைப்பு

30/81, லோங்டன் பிளேஸ்,

கொழும்பு 7, இலங்கை.

தொலைபேசி/தொலைநகல் : 94-112506855/2598413